# வேளாண்மைத்துறை

## மானியக் கோரிக்கை எண் – 5

## அறிவிப்புகள்

## 2015–2016

**திரு.ஆர்.வைத்திலிங்கம்**

**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்**

**1. திருப்பூர் மாவட்டத்தில் புதிய மண் ஆய்வுக் கூடம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அனைத்து விவசாய நிலங்களுக்கும் மண் ஆய்வின் அடிப்படையில் உரமிடுவதை ஊக்குவித்து செயல்படுத்தி வருவதால், தமிழகம் அகில இந்திய அளவில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இதன் ஒரு பகுதியாக, திருப்பூர் மாவட்ட வேளாண் பெருமக்கள் மண்வளமறிந்து உரமிட்டு உரச்செலவைக் குறைத்து பயன்பெறும் வகையில் இம்மாவட்டத்தில் புதிய மண் ஆய்வுக் கூடம் அமைக்க **ரூ.75 இலட்சம் நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, பல்வேறு மண்வள மேம்பாட்டுப்பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும், நெல்வயல்களில் பசுந்தாளுரப் பயிர்களை ஊடுபயிர்களாக சாகுபடி செய்து மண்வளத்தை மேம்படுத்தவும், கரும்பு பண்ணை கழிவுகளை உயிர் உரமாக மாற்றி மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தவும் **ரூ.1.39 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. மண் பரிசோதனை நிலையங்களை வலுப்படுத்துதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, மண் ஆய்வினை திறம்பட மேற்கொள்ள தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் இயங்கிவரும் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் உள்ளிட்ட 30 மண் பரிசோதனை நிலையங்கள், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் ஆகியவற்றிற்கு அதி நவீன ஆய்வு உபகரணங்கள் வாங்கி ஆய்வகத்தை வலுப்படுத்த, **ரூ.1.70 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. திருச்சி உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தை வலுப்படுத்துதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் வழங்குவதை உறுதிசெய்யவும், மண் வளத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றும் உயிர் உரங்களின் தரத்தினை உறுதி செய்யவும், திருச்சிராப்பள்ளியில் இயங்கி வரும் உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் சேவையினை அதி நவீன ஆய்வு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மூலம் வலுப்படுத்த **ரூ.45 இலட்சம்** செலவிடப்படும்.

## 5. அமிலவகை நிலங்களை சீர்திருத்தம் செய்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, களர், உவர் மற்றும் அமில நிலத்தன்மையுள்ள நிலங்களைக் கண்டறிந்து அவற்றை சீர்திருத்தி, உற்பத்தியை பெருக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தருமபுரி, புதுக்கோட்டை, சிவகங்கை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருமக்களின் நலனுக்காக, 12,500 ஏக்கர் அமில வகை நிலங்களை சீர்திருத்துவதற்குத் தேவையான சுண்ணாம்பு அல்லது டோலோமைட் 50 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க **ரூ.1.50 கோடி நிதி** ஒதுக்கப்படும்.

## 6. திருவாரூர் மாவட்டத்தில் புதியதாக வீரிய ஒட்டு தென்னை நாற்றுப் பண்ணை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, தென்னை விவசாயிகளின் நலன் கருதி, விவசாயிகளிடையே அதிக தேவையுள்ள குட்டை x நெட்டை வீரிய ஒட்டு தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்ய, திருவாரூர் மாவட்டம் வடுவூர் தென்பாதி கிராமத்தில் குட்டை x நெட்டை தென்னங்கன்றுகள் உற்பத்திக்காக, புதிதாக தென்னை நாற்றுப் பண்ணை உருவாக்க **ரூ.86.32 இலட்சம் நிதி** ஒதுக்கீடு செய்யப்படும். இப்பண்ணை அமைக்கத் தேவைப்படும் 15 ஏக்கர் நிலத்தையும் அரசே வழங்கும்.

## 7. உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை வலுப்படுத்துதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, விவசாயிகள் தரமான உரங்கள் பயன்படுத்துவதை உறுதி செய்ய 9 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களில், நுண்ணூட்ட உரக் கலவையினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அணுக்கதிர் ஈர்ப்பு ஒளிக்கற்றைமானி (Atomic Absorption Spectrophotometer) உள்ளிட்ட நவீன பரிசோதனைக்கருவிகள் **ரூ.1.58 கோடி செலவில்** நிறுவப்படும்.

**8. மண் ஆய்வுக்கூடங்கள் மற்றும் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு புதிய கட்டடம்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, மாநிலத்தில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் ஏழு மண் ஆய்வுக் கூடங்களுக்கும் ஆறு உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் புதிய கட்டடம் கட்ட **ரூ.7.80 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. காய்கறி உற்பத்தியை உயர்த்த மாதிரி காய்கறி கிராமங்கள்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, தமிழகத்தின் காய்கறித் தேவையை பூர்த்தி செய்வதற்காக, மாநிலத்தில் 22 மாவட்டங்களில், காய்கறி சாகுபடிக்கு உகந்த கிராமங்களை தேர்வு செய்து, விவசாயிகளை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கி, அக்கிராமங்கள் **ரூ.5 கோடி செலவில்** மாதிரி காய்கறிக் கிராமங்களாக தரம் உயர்த்தப்படும்.

## 10. ஊட்டியில் புது பொலிவுடன் அரசு தாவரவியல் பூங்கா

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ஆண்டுதோறும் சுமார் 22 இலட்சம் உள்நாடு மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப்பயணிகளும், இயற்கை ஆர்வலர்களும், மாணவர்களும், குழந்தைகளும் கண்டு மகிழும், நீலகிரி மாவட்ட தாவரவியல் பூங்காவை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்த இப்பூங்காவில் கண்ணாடிக் கூடம், கள்ளிக்கூடங்கள், பெரணி இல்லங்கள், மலர் அலங்காரக் கூடங்கள் உருவாக்கப்படுவதுடன், அயல்நாட்டு தாவர வகைகளையும் கொண்டுவந்து, உட்கட்டமைப்புகளை நவீனமயமாக்க **ரூ.5.50 கோடி நிதி** ஒதுக்கப்படும்.

## 11. பயிர்களில் உற்பத்தித்திறனை உயர்த்த தேனீ வளர்ப்பு முறையினை ஊக்குவித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களில் அயல் மகரந்தச் சேர்க்கையினால் உற்பத்தியை அதிகரிக்க தேனீக்கள் வளர்க்கவும், தேன் உற்பத்தி மூலம் கூடுதல் வருமானம் பெறவும் 7000 தேனீ பெட்டிகள் மற்றும் காலனிகளும், 670 தேன் பிழிந்தெடுக்கும் கருவிகளும் **ரூ.1.656 கோடி** மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## 12. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பசுமைக்குடில்கள், பூச்சிபுகாத வலைக்குடில்கள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, இடுபொருட்களின் பயன்பாட்டுத் திறனை உயர்த்துவதன் மூலம் தரமான விளை பொருட்களை உற்பத்தி செய்து, சந்தையில் அதிக விலை கிடைக்க, அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை ஆண்டு முழுவதும் காய்கறிகள் மற்றும் மலர்களை சாகுபடி செய்து, ''மாதிரிப் பண்ணைகளாக'' மாற்றுவதற்கு, பசுமைக் குடில்களும், பூச்சிபுகாத வலைக்குடில்களும் அமைக்க **ரூ.2 கோடி** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 13. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் குளிர்பதனகிடங்குகள் மற்றும் எடைமேடை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, காய்கறி மற்றும் பழங்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கவும், அவற்றின் சேமிப்புக் காலத்தை நீட்டிக்கவும், கடலூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் 25 மெ.டன்னும், தர்மபுரி ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் 50 மெ.டன்னும் கொள்ளவுள்ள 2 குளிர்பதன கிடங்குகளும், திருக்கோவிலூார், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, நாமகிரிப்பேட்டை, தர்மபுரி, இலுப்பூர், திருச்செந்துறை மற்றும் செங்குன்றம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தலா 60 மெ.டன் எடைத்திறன் கொண்ட எடைமேடைகளும் மொத்தம் **ரூ.3.10 கோடி மதிப்பில்** அமைக்கப்படும்.

**14. புதிதாக 8 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைப்பதற்கு **உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்** அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, நாமக்கல் மாவட்டத்தில் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளுக்காகவும், புதுக்கோட்டை மற்றும் தேனி மாவட்டத்தில் தென்னைக்காகவும், விருதுநகர் மாவட்டத்தில் மாங்கனிக்காகவும், திருப்பூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளத்திற் காகவும் புதுக்கோட்டை மாவட்டத்தில் அங்ககச்சிறுதானியங்களுக்காகவும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மக்காச்சோளம் மற்றும் பயறு வகைகளுக்காவும் ஆக மொத்தம் எட்டு **உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்** அமைக்க **ரூ.3.43 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளியில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஒன்பதுக்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்க, அப்பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இல்லாததால், இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி, வெள்ளரிவெள்ளி கிராமத்தில் **புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க ரூ. 2.50 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 16. சிறுதானிய சிறப்புத்திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, தமிழக மக்களுக்கு ஊட்டச்சத்து பாதுகாப்பினை வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், ஊட்டச்சத்து மிகுந்த சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்களை அதிகளவில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக அதிக விளைச்சல் தரக்கூடிய தரமான சிறுதானிய விதைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கவும் சிறுதானிய நுண்ணூட்டக்கலவை மூலம் உற்பத்தி திறனை உயர்த்தவும் **ரூ.2.30 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 17. கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் மலர் வணிகவளாகம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் மல்லி, ரோஜா, பிச்சி, கோழிக்கொண்டை, சம்பங்கி போன்ற மலர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி, நியாய விலை கிடைப்பதை உறுதி செய்யவும், வணிகர்கள் மற்றும் நுகர்வோர்களின் வசதிக்காகவும் தோவாளையில் 40 கடைகளுடன் கூடிய **மலர் வணிக வளாகம்** அமைக்க **ரூ.1.50 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. ஈரோடு, மதுரை மற்றும் திண்டுக்கல் அக்மார்க் ஆய்வுக் கூடங்களுக்கு சொந்தக் கட்டடம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, நுகர்வோருக்கு தரமான உணவுப்பொருட்கள் கிடைப்பதை உறுதிசெய்யவும், கலப்படத்தினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கவும் ஈரோடு–1, மதுரை(தெற்கு) மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் மாநில அக்மார்க் ஆய்வகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட **ரூ.90 இலட்சம் நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. திருவாரூர்மாவட்டம், வலங்கைமான் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சொந்தக் கட்டடம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, வாழை, வெற்றிலை அதிக அளவில் பயிரிடும் பகுதியான திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் பகுதி விவசாயிகளின் நலனுக்காக, வலங்கைமான் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சேமிப்புக் கிட்டங்கியுடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்ட **ரூ.1 கோடி நிதி** ஒதுக்கீடு செய்யப்படும்.

**ஆர்.வைத்திலிங்கம்**
**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும்**
**வேளாண்மைத்துறை அமைச்சர்**